உ

சிவமயம்.

# முருகன் மும்மணிக் கோவை.

இஃது

கோம்பைநகர் சு. பிச்சன்செட்டியார் குமாரன்

**P. கணபதி செட்டியாரால்**

இயற்றப்பெற்று,

---

ஷையூர்

ஸ்ரீமாந். வ. சீராமன்செட்டியார் அவர்கள்

பொருளுதவியால்,

---


மதுரை:

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பித்தது.

1925.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 NOV 1925
MADRAS

Q26:417
N25
177722



ஸ்ரீ முருகக்கடவுள்.

# சாற்றுப்பாக்கள்.

மதுரை ஜெயின்ட்மேரி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

## ப்ரும்மஸ்ரீ மு. கோவிந்தசாமி ஐயரவர்கள்

## இயற்றியது.

வெண்பா.

முருகன் றிருவடியின் மும்மணியாங் கோவை
மருவ வணிந்தான் மணக்கத்—தருநேர்
குணமுடையான் கூர்மதியான் கோம்பைநகர் வாழ்வான்
கணபதியாம் பேர்வாணி கன்.

---

மதுரைத் தமிழ்வித்வான்

## மகா-ள-ள-ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்

## இயற்றியது.

வெண்பா.

மும்மணிக் கோவை முருகன்மேற் சொல்லிவைத்தான்
எம்மணிப்பா வல்லவனீண் டிவ்வுலகில்—நம்மணிநா
வாயூறக் கோம்பை வணிகன் கணபதிதேன்
மீயூறச் செந்தமிழான் மிக்கு.

போடிநாயக்கனூரிலிருக்கும் சைவசித்தாந்த நிஷ்டானுபூதி
வாய்ந்தவரும் தமிழ் வித்துவானுமாகிய
ஸ்ரீமாந் கு. அண்ணாமலைப்பிள்ளை யவர்கள்
இயற்றியது.

வெண்பா.

திருமும் மணிக்கோவை செந்தமிழால் யாத்து
முருகன் மிசையே மொழிந்தான்—தெருணிறையுஞ்
சன்மார்க்கன் கோம்பைத் தனவான் கணபதிவேள்
புன்மார்க்க நீத்த புனிதன்.

உ

சிவமயம்.

# முருகன் மும்மணிக் கோவை.

## விநாயகர் துதி.

### வெண்பா.

செம்மணி மோலி சிரஞ்சேர் முருகேசன்
மும்மணிக் கோவை மொழிந்திடவே—எம்மனத்தில்
முந்தி நினைப்பவர் முக்கண் விநாயகர்
தொந்தி வயிறே துணை.

---

## நூல்.

### ஆசிரியப்பா.

பூமகள் சீர்த்தி பொலிவுறு மாநில
நேமியி னகத்து நிலையிலா வாழ்க்கைக்
காக்கிய மலரோ னன்னையின் வயிற்றிற்
போக்கிய வினையாற் புகலிட மதுவா
யையிரு மதிய மமைவுற நின்று
பையினின் றிழியப் பட்சமொன் றளவு
மென்னையி ளுவிக் கிருப்பிட மின்றிப்
பின்னையு மிறப்போ பிறப்போ வென்னத்
துன்னிய மாக்கள் சொற்புலம் புதலு
மெந்தைக் கொன்று மியம்பிட வொண்ணுச்
சிந்தைய ளுகித் திகைத்திடும் போழ்திற்
சோகமே விட்டுத் துன்பக் கடலே
யாகர மாக்கி யலைவுறுங் காலை

விதியின் வலியோ வினையின் பயனோ
கதிரொளி விடுப்பக் கயத்தா மரையின்
மலர்பூத் தென்ன மண்மிசை வீழ்ந்து
அலர்வாய் திறந்து ஆவென் றலற
அழுகுரல் கேட்டு அண்டையி னிருந்தோர்
பழுதில் மேனியாம் பயலென் றுரைப்பத்
தேங்கி யிருந்த திரள்சனம் வாழ்த்த
ஏங்கி யிருந்த வெந்தையு மகிழ்ந்து
சர்க்கரை வழங்கிச் சடாக்ஷர மோதி
வேதிய னொருவனை விரைவினிற் றேடிச்
சோதிடங் கேட்பத் தொன்னூ லாய்ந்து
நீதியுங் குணமு நிறைந்த மகவென
ஆதியின் மறைநூ லந்தணன் கூறச்
சீரிற் றிகழச் செழிப்பாய் வளர்த்து
நாரிற் பிணைத்த நன்மலர் போன்று
உச்சியை மோந்து உள்ளங் குளிர
மெச்சிப் புகழ்ந்து மெல்லுண வருத்தி
ஐந்தாம் வயதி னருங்கலை பயிற்றி
மைந்தர்க் கியற்று மணம்புரி வித்து
ஞாலம் புகழ நண்ணினன் றுறக்கம்
சாலச் சிறந்த சண்முக வேளே
கதியுனை யன்றிக் கருதுவா ரில்லை
கொதிமனந் தாழ்த்திக் குழுமிய மாந்தரின்
நாப்பண் பல்கலை நவின்றிட வருளிக்
காப்பது முன்கடன் கருணையின் றிருவே
என்கருத் திதுவா மெளியே
னன்னெறி சேரில் நாளும் நலமே. (1)

### வெண்பா.

நலமளிக்கும் பொற்றாளாய் நான்மறையுங் காணுப்
புலமளிக்கும் நற்கருணைப் பூதி—அலமளிக்கும்
மின்னார் முலைமயக்கில் வீழாமற் காத்திடுவா
யொன்னார் பகைவேலா யுதா. (2)

### கலித்துறை.

உதாத் தடக்கி யுருவாய்ச் சமைத்திவ் வுலகமதி
லதரக் கனிவா யமுதூட்டி நல்ல வறிவழிக்கும்
வதனப் பரமாதர் மாய்கையிற் சிக்கி மயங்கிடவோ
மதனைப் படைத்தா யெனையாளு மூல மறைக்குருவே. (3)

### ஆசிரியப்பா.

வேலுங் கொடியும் விளங்கிட வென்றே
தாலம் புகழத் தண்கிரி நின்று
அருளுந் திருவு மமைந்திடு முருகா
மருளால் வாடும் மதியினைப் போக்கித்
தெள்ளிய வறிவுஞ் சிறந்திடுங் கலையு
முள்ளுற வுணர்த்தி யுனதடிக் காளா
யின்புற நாளு மிருத்தி
யன்பொடு கருணை யளித்திடு வாயே. (4)

### வெண்பா.

வாகை யலர்சூடி வானவரை யாதரித்துத்
தோகை மயிலூருஞ் சூர்ப்பகைவா—ஓகையுடன்
நெஞ்சிற் றுகளறுத்து நித்தமுனைத் தோத்திரிக்கச்
செஞ்சொற் கலைநாவிற் சேர். (5)

### கலித்துறை.

சேமஞ் செறிந்த தெரிவைய ராசைசெய் சிந்தனையாய்க்
காமஞ் செறிந்த கலையென வோடிக் கலங்குவதோ
நாமஞ் செறிந்த குமராவுன் நற்பதம் நண்ணினனன்
தாமஞ் செறிந்த கருணை பரவிடுஞ் சண்முகனே. (6)

### ஆசிரியப்பா.

முக்கண் ணீசர் முனிவாற் பண்டு
தக்கன் வேள்வியைத் தகைத்துவா வென்னச்
சித்ரப் பிணிமுகஞ் செலுத்தி யமர்செய்யத்
தைத்யப் பாட்டனுந் தந்திர முன்னி
அங்கையி லடங்காக் கொங்கையர் பலரை
யிங்கிதங் காட்டிக் கங்கையின் சுதனை
மாய்கை வலையான் மறித்துக் கூடென
வேய்பனைத் தோளார் விரக மாதருங்
கொண்டலைக் கண்டு குலாவு மயிலென
அண்டையில் வந்து அபிநயங் காட்ட
மைத்துனன் கணையால் மையல் மிஞ்சி
கட்டித் தழுவிக் கலவியி லாழ்ந்து
இன்பக் கடலி னிறுமாப் படைந்த
அன்பர்க் கிரங்கு மணிவேல் முருகா
துக்கசா கரத்திற் றுலையா தழுந்தும்
மக்களைக் காத்தல் மாட்சிமை யன்றோ
என்பால் நயந்து இருவினை கழித்துப்
புன்றொழில் சேரா தின்கவி யுரைத்து
மாந்தர் வகுப்பில் மாண்புற வருளிச்
சாந்தமு மளித்துத் தனயனைக் காப்பாய்

கூந்தற் றேலகக் கோவே
காந்தம் புகழுங் கந்த சுவாமியே. (7)

வெண்பா.

வாமி வலப்பாகம் வாழு முருகேசா
நேமி நலங்கொள் நிமிர்வாகா—பூமிதனை
மாங்கனிக்காய்ச் சுற்றி மலைமீ தமர்ந்தோனே
தீங்கொன்றுஞ் சேராமற் செய். (8)

கலித்துறை.

செய்ய கழலார் சிலம்பி னொலியென் செவிபுகுத்தி
வெய்ய துனிவா லிதயங் கெடாது விலக்கிவினை
கொய்ய வரிலென் மனமுங் குளிர்ந்து கொடும்பழிதீர்ந்
துய்யு மடியேன் குமரா மயின்மீ துயர்ந்தவனே. (9)

ஆசிரியப்பா.

உயர்பொருண் மலியு மொண்டமிழ்க் கரசாங்
கயம்பொழி பொதிகைக் கடமுனிக் கன்று
சும்மா விருவெனச் சொல்லிய குருவே
செம்மான் மகிழுந் தெண்டா யுதனே
மானுட வாழ்க்கையை மதித்தோம்பு மாக்கள்
தேனுகர் வண்டெனச் சிந்தையு மயங்கி
ஆடித் திங்களி னலைக்கு மனிலத்
தூடிய துரும்பா யுழன்றுழன் றழிவர்
நித்தமு நின்பதம் நேர்பட முன்னிய
சித்தத் திடும்பைகள் சேர்வது மென்னே
நக்கர் செவிமறை நவின்றிட்ட
உக்கிர வரக்கரி னுயிர்கவர் வேலா. (10)

### வெண்பா.

வேங்கை மரமாகி வேடுவரை யேமாற்றி
மான்கன்றைக் கூடு மயில்வீரா—பாங்குடனே
சேவற் கொடிதாங்கித் தெண்டா யுதங்கொண்டு
நாவற் றுடுக்கை நசுக்கு. (11)

### கலித்துறை.

சுக்கறி யாத கஷாயமுண் டோவெனுந் தொன்மொழிக்கி
லக்கம தாகி யருள்புரி வெற்றிவே லாயுதனே
சக்கர வாளத் தரணியி லுன்றன் சரணமன்றித்
திக்கிலே நாகச் சிறுமி மருங்குறுஞ் சிற்பரனே. (12)

### ஆசிரியப்பா.

சிற்றம் பலத்திற் றென்புலி யரவம்
நற்புகழ் பாடவும் நந்தி துதிக்கவும்
கற்றைக் குழலுமை களித்து நாணவும்
பொற்புற நடனம் புரிந்தருள் கண்ணுத
லெந்தைக் கன்பா யிடமருங் கொளிருஞ்
சுந்தா முருகா சுரர்பதி மருகா
மடமதி யணுகா மைந்தனைத்
திடமுறக் காத்தருள் சேவடி துணையே. (13)

### வெண்பா.

துணைகோரும் மாந்தருளஞ் சொப்பனத்திற் றோன்றிப்
பிணையாகுஞ் சோதிப் பிழம்பே—மணைசேருங்
கந்தா கதிர்காமா காட்சி தருஞ்சேயா
வந்தா தரிப்பாய் மகிழ்ந்து. (14)

### கலித்துறை.

[றை
துதிக்கும்பொழுதும்மயில்வேல்துணையெனச்சொல்லியொன்
மதிக்கும் பொழுதும் மயில்வேல் துணையென வாழ்த்திவரம்
விதிக்கும் பொழுதும் மயில்வேல் துணையென வீழ்ந்தடியிற்
குதிக்கும் பொழுதும் மயில்வேல் துணையெனக் கூறுவனே.

### ஆசிரியப்பா.

கூடற் பதிவளர் குன்ற வில்லியோ
டாடக வரியணை யமர்ந்திடு முருகா
திங்களு மோர்நாட் சிறப்பொடு வீசம்
பொங்கணி குமணன் பொறுமையி னரைக்கால்
செங்கதி ரோனுஞ் செழிப்புறக் காலுங்
கங்கையின் கணவன் களிப்பா னரையு
மல்லா லதிக மளித்தன ரில்லை
நல்லோர் புகழும் நாரணன் மருகா
முக்காலு மீந்து முழுதுங் காத்திடு
மிக்கா லத்திறை யென்பது முனையே
யாதலி னின்று னடியிணை போற்றுங்
காதல னென்பாற் கருணைகூர்ந் தருள்வாய்
ஆறு மாமுக வண்ணலே
நீறு தந்திடில் நீள்வினை யறுமே. (16)

### வெண்பா.

மேலாம் பதவி விரும்பு மடியார்க்கு
நாலாம் பதவி நனியருளும்—வேலோனே
பஞ்சமா பாதகம் பற்று தெனைமேவித்
தஞ்சமா யுன்கழலைத் தா. (17)

### கலித்துறை.

தானவர் நாடு தழல்பற்றி வீழச் சரந்தொடுத்து
வானவர் நாடு வளமுறச் செய்த வலிமையினாற்
கானவர் நாடு கடுகி நடந்த கதிர்வடிவேல்
மோனவர் நாடு முதுக்குறை யெற்கு முரைத்தருளே. (18)

### ஆசிரியப்பா.

அருண்மொழிக் கலைஞ ரகத்தினில் வளருங்
குருமொழி வேலா குக்குட முயர்த்தோய்
மிடிசெறி மனத்தனைய் மேன்மையு மிழந்தனன்
கடிதினோர் வந்து கலக்குறு நெஞ்சகத்
திருளினை யோட்டி யென்கருத் திசையத்
தெருளினை யூட்டிச் செவிமறை புகுத்தியே
யிம்மையி லெனக்கொன் றிணையில்
மும்மத வாரண முதல்வற் கிளவலே. (19)

### வெண்பா.

இளமையி லாக்கை யெழில்தன்னைப் பேணி
வளமையி லாது வருந்தும்—உளமதனில்
ஆறென்னு மக்கரத்தை யன்பொடு சேர்த்திடில்
வீறெனக் காகுமே வேள். (20)

### கலித்துறை.

வேலங் கரத்தில் விளங்கத் தருக்குடன் விண்ணவர்க்காய்த்
தூலங் கறுத்த தநுசரை வெல்லத் துணிவுகொண்டு
ஞாலங் களிக்க நறுமலர் வாகையும் நாட்டிமயில்
மேலங் கொளிரு முருகா இருவினை வென்றிடுமே. (21)

177722

ஆசிரியப்பா.

வெண்ணீ ருற்பிணி விலக்கும் பண்டிதன்
தெண்ணீர்க் கயத்திற் செனித்த பாலகன்
வைசிய ரில்லம் வாழ்ந்திடுங் குமரன்
மைசிகை வள்ளி மருவிய கந்தவேள்
முளரிப் பதத்தினை முன்னி
விளரி தீர்த்துன் வினைசெறு நெஞ்சே. (22)

வெண்பா.

சேடு நிறைந்த சிவகுரு நாதாநற்
பீடு நிறைந்த பெருமானே—நீடுந்
திருவரு ளோங்கச் செறிதுயர் நீங்கக்
குருமொழி செப்புங் குகா. (23)

கலித்துறை.

காந்தத் துறைந்துங் கவினுறு காவிற் கலந்துமணி
கூந்தற் சிகியிற் குலவுங் கருணைக் குமரகுரு
சாந்தத் துறையிற் கருத்தைத் திருப்பித் தகவுடனே
நீந்தற் கரிய பவக்கரை சேரும் நிலையருளே. (24)

ஆசிரியப்பா.

நிலவுல கதனில் நீடிய வினையாற்
றலமுறை பலவாய்ச் சாபந் தாங்கிய
கிரவுஞ் சக்கிரி கிழிந்திட வேல்கொண்
டுரந்தனை யுண்டே வுருவமுஞ் சிதறப்
பொடியென வாக்கிப் பூழியுங் கிளப்பிச்
செகந்தனைப் புரக்குந் தெண்டா யுதனே
கேடு போக்கிநின் கிருபையால்
வீடு நிலைபெற வேண்டினன் முருகா. (25)

வெண்பா.

முருகார் தருமேவு மூவாலை வேடர்க்குக்
கிருபா கடாட்சங் கிளர்வேல்—கருசேருங்
கன்ம வினைவேண்டேன் காசு பணம்வேண்டேன்
நன்மை சுகங்கேட்டேன் நாட்டு. (26)

கலித்துறை.

நாட்டிற் சிறந்த நலந்திக ழூற்பவ நாயகனைக்
கூட்டிற் புகுத்தி யடைப்பது நல்ல கொடுமையிது
பாட்டிற் றொடுத்த பனிமலர் சூட்டிப் பணியுமெனக்
கேட்டிற் பதியா வெழுத்தறி வித்தரு ளேற்றுவையே. (27)

ஆசிரியப்பா.

ஏக வெளியி னிடையருச் சோதி
நாக முடியில் நண்ணுங் கடவுள்
கொடுவினைக் காலன் குறத்தி கொழுநன்
நடுநிலை நாட்டும் நாமவே லாயுதன்
சிந்தனை யுற்றோர் தீவினை துடைப்பன்
பந்தமற் றடிபணி பத்தர்க ணேசன்
பன்னிரு புயத்தான் பண்புடைத்
துன்னிய பதமலர் துதிப்பாய் மனமே. (28)

வெண்பா.

மண்ணீ ரனல்காற்று மாதிரமோ டைந்தாகிப்
பெண்ணுசை கொள்ளும் பெருமையென்—விண்ணுடர்
துன்பந் தவிர்த்துச் சுரபதியான் றன்மகளை
யின்பங் கலந்தோயீ டேற்று. (29)

## கலித்துறை.

எற்றித் துதிக்கு மிருந்தவ யோக ரிடும்பைதனைக்
காற்றிற் பறக்குங் கறங்கென வோட்டிக் கதியருளுஞ்
சேற்றிற் பிறக்குஞ் செழுமலர் மேனித் திருமுருகா
போற்றித் துதிக்குந் திருவுளந் தந்தருள் பூசிதனே. (30)

## வா ழி.

கங்கையின் சுதனும் வாழி கதிர்வடி வேலும் வாழி
மங்கைகுஞ் சரியும் வாழி மான்மகள் வள்ளி வாழி
செங்கையிற் பொலியுந் தூசுச் சேவலு மயிலும் வாழி
சங்கையின் மறைகள் வாழி தண்டமிழ்க் கோவை வாழி.

---

முருகன் மும்மணிக்கோவை
சம்பூர்ணம்.

உ

சிவமயம்.



# மீனலோசனி அச்சியந்திரசாலை,

தெற்குக் கோபுர வாசல்,
தோட்டியன் கிணற்றுத்தெரு,
மதுரை.

---

## அச்சு வேலைகளும், பயிண்டு வேலைகளும்.

தமிழிலும், இங்கிலீஷிலும், பலவித மைகளாலும், கிலிட்டுகளாலும்
திருமணப்பத்திரிகைகள், பட்டா, முச்சலிக்கா, ரசீது, உண்டியல்,
வக்காலத்து முதலிய கோர்ட்டுச் சம்பந்தமான வேலைகளும்
புத்தகங்களும், வியாபார சம்பந்தமான சகல வேலைகளும்
கணக்குப்புத்தகங்கள், வட்டிச்சிட்டைப் பாரங்கள், லெட்
டர்ப்பாரங்கள், இலக்கணப்பிழைகளில்லாமல் திருத்த
மாயும், பார்டர்களாலும், படங்களாலும், எவர்
மனதையும் கிரகிக்கும்படி அலங்கரித்து
சீக்கிரமாகவும், சார்சுசகாயமாகவும்
செய்து கொடுக்கலாகும்.

**புஸ்தகங்கள் அழகாக அச்சிட ராயல் பிரீண்டிங்மீஷின்
வரவழைத்திருக்கிறேம்.**

ரூலிங்மிஷின்,நம்பரிங்மிஷின், பர்ப்பரேஷன்மிஷின், கட்டிங்மிஷின்
முதலிய இயந்திரங்கள் எங்களிடமிருப்பதால் குறிப்பு, பேரேடு,
கையெழுத்துப்புத்தகம், ரசீது, உண்டியல், பட்டியல், லெட்டர்
பாட், வட்டிச்சிட்டை முதலிய சகல பைண்டுவேலைகளும்
தனித்தனிஆர்டர்களுக்கு ரூல், கட்டிங், பர்ப்பரேஷன்
நம்பர் முதலிய வேலைகளும் குறைந்தசார்சுக்குத்
தயார்செய்து கொடுக்கலாகும்.

இங்ஙனம்,

தேவாரபாராயணம்

அ. முத்துச்சாமிப் பிள்ளை,

மானேஜிங் புரப்ரைட்டர்.